**<u>இந்தியாவும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய பேராட்டமும் – பேசாப்பொருளை பேச நான் துணிந்தேன்</u>**

'இனம் மொழி மதம் என்பவற்றின் அடிப்படையில் தமிழ் அரசு ஒன்றை உருவாக்க கங்கணம் கட்டி நிற்கும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு இந்தியாவின் ஒற்றுமைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் எனது காத்திரமான அபிப்பிராயமாகும்' J. N. Dixit, Assignment in Colombo.

'உலகெங்கும் தமிழ் இனம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கின்றது, தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது, தமிழீழத்திலேதான் தனி அரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கின்றது.' தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

தனி அரசு உருவாகுவதற்கான புறநிலைகள் எவை?

'சிங்கள தேசமானது தமிழ் இனத்தை அரவணைத்து இணைத்து வாழவும் விரும்பவில்லை, அதே சமயம் பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டும் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்கால சுபீட்சமும் இன்றி, சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்தும் வாழ முடியாது.' தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மாவீரர் நாள் உரை 2004.

ஜனநாயகம் என்றால், மக்கள், மக்களுக்காக, மக்களால் நடாத்தப்படும் ஆட்சியாகும். இன்னொரு வகையில் கூறுவதாயின் ஒரு மக்கள் இன்னொரு மக்களை ஆள முடியாது. இதுவே சுயநிர்ணயத்தின் தாற்பரியமாகும். சிறீலங்காவில் எண்ணிக்கையில் பூதாகரமான சிங்கள மக்கள் தீவு முழுவதும் தம்முடையதே என ஆளும் போது, எண்ணிக்கையில் குறைவான தமிழ் மக்கள் ஆளப்படும் மக்களாக இருந்து வருகின்றனர். இதன் விளைவுகளே தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டமும் அது வரித்துக் கொண்டுள்ள போராட்ட வடிவங்களுமாகும். இன்னொரு வகையில் கூறின் இழந்த இறைமையை மீட்டு எடுப்பதற்கான போராட்டமாகும். 1833ல் பிரித்தானியர் தமிழர் இறைமையை சிங்களவரின் இறைமையோடு கலந்து சிறீலங்காவின் இறைமைக்கு வித்திட்டனர். சிங்களவர் அந்த இறைமையை துஷ்பிரயோகம் செய்து வந்ததால் தமிழ் மக்கள் அதை மீட்டெடுப்பதற்கான ஆணையை 1977ல் வழங்கினர். இந்த ஆணைக்கு வடிவம் கொடுத்து வளர்ச்சி கண்டு நிற்பதே இன்றைய போராட்டமாகும். எனவே தான் இந்தப் போராட்டம் The Hindu பத்திரிகை கூறுவது போல் சலுகைகளுக்கான போராட்டமல்ல. இந்திய ஆட்சியாளர்கள் எண்ணுவது போல் இதற்கான தீர்வு அதிகார பரவலாக்கமோ, மட்டுப்படுத்தப்பட்ட அல்லது ஆகக்கூடிய சுயாட்சியுமன்று. சுயநிர்ணயத்தை கூட்டவோ, குறைக்கவோ, மட்டுப்படுத்தவோ முடியாது. ஏனெனில் இந்தப் போராட்டம் அந்நிய சிங்கள ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்கான சுதந்திரப் போராட்டமாகும். இதனை எந்த வழியிலாவது அடைந்தே தீருவோம் என்பதில் தமிழ் மக்கள் உறுதியுடன் இருக்கின்றனர். இதற்காக அவர்கள் கொடுத்த விலைகள் ஏராளம். சிறீலங்காவின் இறைமை ஒருமைப்பாடு என்பன தமிழர் தேசத்தை உள்ளடக்க முடியாத நிலைக்கு இன்று களநிலை மாறுபட்டுக் காணப்படுகின்றது.

எனவேதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண அக்கறை காட்டுவோர் இந்தக் களநிலையை உள்வாங்க வேண்டும் என்பது தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பு ஆகும். தமிழர் தங்கள் தாயகத்தில் தம்மை ஆளுவது என்பது பேச்சுவார்த்தைக்கு அப்பாற்பட்ட பேசாப் பொருள். ஆனால் அதே சமயம் பொதுநலவாயம் கருதி சிங்கள தேசத்துடன் சரிசமனாக இருந்து இரு தேச மக்களின் பொது நலங்களை உள்வாங்கி, எந்த விதமான அழுத்தங்களும் இன்றி பேச்சுவார்த்தைகள் இடம் பெற வேண்டும். இதனையே இந்தியாவும் உள்வாங்க வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

அதே சமயம் ஒரு மக்களோ, ஒரு நாடோ தனித்து வாழ முடியாது. ஒரு மக்களின் சுதந்திரம் இன்னொரு மக்களின் இருப்பிற்கு இடைஞ்சலாக அமைய முடியாது. ஒரு தேசத்தின் பிரசவம் இன்னொரு தேசத்தின் இருப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்க முடியாது. ஈழத்தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பாரம்பரியத்தால், பண்பாட்டால், மொழியால், மதத்தால், புவியியலால், வரலாற்றால், இந்தியாவுடன் பிணைந்தவர்கள். எனவே தான் தமிழீழமோ, சிங்களமோ இந்தியாவின் புவிசார் நலங்களுக்கு, வல்லரசு நிலைக்கு, தேசிய ஒருமைப்பாட்டிற்கு எந்த வகையிலும் தடையாக இருக்க முடியாது. மாறாக பரஸ்பர இணைப்பு, வளர்ச்சி என்பவற்றிற்கு வழி வகுக்க வேண்டும். தமிழ் மக்கள் இந்த நிலைப்பாட்டில் என்றும் தளம்பியதில்லை.

பச்சையாகச் சொல்லப்போனால் சிறீலங்காவின் இறைமையோ, பிரதேச ஒருமைப்பாடோ தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை செத்துப் போனதொன்றாகும். அதற்கு உயிர் கொடுக்கும் முயற்சிகள் எல்லோருக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என அஞ்சுகிறோம். எல்லாம் அறிந்த இந்தியா களநிலையை ஏற்று தமிழர் தேசத்தையும் சிங்களத்தையும் சமமாக அங்கீகரிக்கும் கொள்கைகளை வகுத்து, திட்டங்களைத் தீட்டி செயற்பட முன்வர வேண்டும் என அவாவுகின்றோம்.

ம. தனபாலசிங்கம், அவுஸ்திரேலியா.

15 டிசம்பர் 2004